[28th July 1965

டிருக்கும். ஆகவே, நிர்ணயித்துள்ள தரப்படி நெல் கொடுத்தால் கட்டாயம் நிர்ணயித்த விலை கிடைக்கும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: அங்கு அரிசியோடு கோதுமை, ரவா, மற்றும் கடலை போன்ற பொருள்களை அலாட்மெண்டு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு தடவையும் விலை நிர்ணயம் செய்வதில் தாமதப்படுகிறது. அதனால் விற்பனை செய்வதற்கு தடையாக இருக்கிறது. அவை கெட்டு விடுவதனால் விலை நிர்ணயம் செய்து விற்கும்போது லாபம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இந்தப் பொருள்களை அலாட்மெண்டு செய்கிறபோதே, விலை நிர்ணயம் செய்து அனுப்புவார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினருக்கு விசேஷமாக ஏதேனும் சங்கடம் இருக்கும் பட்சத்தில் எழுதி அனுப்பினால் பரிசீலனை செய்ய முடியும்.

புலவர் கா. கோவிந்தன்: நெல்லுக்கு அரசாங்கம் விலை நிர்ணயம் செய்து அந்த விலைக்கு கீழே விலை படுத்துப் போனால் அரசாங்கமே இன்ன விலைக்கு எடுத்துக் கொள்ளும் என்பதாக ஒரு விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால், விலை வீழ்ந்துவிட்டபோது அரசாங்கம் என்ன விலைக்கு எடுத்துக் கொள்ளும் என விலை நிர்ணயித்திருக்கிறதோ, அந்த விலைக்குத்தான் சாதாரண நிலையிலும் ஏஜெண்டுகள் வாங்குகிறார்கள். அரசாங்கம் நிர்ணயித்துள்ள உச்ச விலைக்கு வாங்குவதில்லை. அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமைய்யா: அரசாங்கம் மாக்ஸிமம் ப்ரைஸ், மினிமம் ப்ரைஸ் என்று நிர்ணயம் செய்திருக்கிறது. இந்த மினிமம் ப்ரைஸுக்கும் கீழே விலை வீழ்ந்து போகிறபோது தான் 'சப்போர்ட்' பிரைஸ் என்று நிர்ணயித்திருக்கிறோம். அந்த விலைக்கு அரசாங்கமே எடுத்துக்கொள்ளும். உயர்ந்த பட்ச விலை வேண்டுமானால் அதற்கு என்ன என்ன தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அந்தந்த தகுதி உடையதாக இருக்கவேண்டும்.

மயிலாப்பூர் தொகுதியில் அரிசிக் கடைகள்

*19 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடந்த நவம்பர் திங்களில் மயிலாப்பூர் தொகுதியைச் சேர்ந்த பத்து வட்டங்களுக்கும் வட்டம் ஒன்றுக்கு ஒரு கடை வீதம் தங்களது சங்கச் சார்பில் கடைகள் வைத்து அரிசி விநியோகம் செய்வதாக மயிலை நெல்லரை வியாபாரிகள் சங்கத்திடமிருந்து உணவு அமைச்சருக்கு மேற்படி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மூலம் அண்மையில் ஏதாகிலும் மனு கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

THE HON. SRI V. RAMAIAH: (a) The answer is in the affirmative.

28th July 1965]

(b) The request was considered along with other individual applications for retail shops under the family cards system. During the recent increase of shops in February, several retailers have been selected from Mylapore area.

Conference of South Zone Ministers on Food

* 20 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the details of the decisions taken at the Conference of South Zone Chief Ministers and Food Ministers held at Madras on 26th September 1964 ;

(*b*) whether any proposal for the establishment of Food-grains Trading Corporation was considered; and

(*c*) if so, the details of the same?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) The main decisions taken at the meeting of the Chief Ministers and Food Ministers held at Madras on 26—9—1964 are as follows :—

(1) The following maximum and minimum prices should be fixed in each of the Southern Zone States for the standard variety for the 1964-65 season :—

State. (1)		Variety. (2)	Minimum price. (3) RS.	Maximum price. (4) RS.
Andhra	..	Akkulu	38·00	39·00
Madras	..	Kattaisamba	38·50	39·50
Mysore	..	Dabbansala	36·50	37·50
Kerala	..	Palghat Matta	40·00	41·00

(2) The State Governments should work out the maximum and minimum prices of paddy and the maximum prices of rice in different districts of their State on the basis of the prices agreed to for the standard variety, with suitable price differentials for other medium, coarse and fine varieties;

(3) that the new set of prices should be given effect to from 15th October 1964 in all the Southern States except the Palghat district of Kerala, in which the new prices should take effect from 15th December 1964.

(*b*) No. It was, however, decided that until the Food Corporation of India was established and started purchase operation on its own, the State Governments concerned should continue their procurement work for building up a buffer stock.

(*c*) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்தக் கேள்வி போட்டு 8 மாதங்களுக்கு மேல் ஆகிறது. பதில் இப்பொழுதுதான் வந்திருக்கிறது. இதற்குள்ளாக நிலைமை ரொம்ப மாறிப் போயிருக்கிறது. இப்பொழுது சமீபத்தில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன? உணவு மண்டலங்கள் அமைக்கப் படுமா? ஒவ்வொரு ராஜ்யமும் தனித் தனியாக இயங்குவதற்கு